**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 12.08.2025

**அசல் வழக்கு எண்.76/2016**

**பி.சா.1 – ஜெயந்தி, த/பெ.யோகவேல்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

உங்களுடைய சொந்த ஊர் எது என்றால் வேலூர் ஆகும். நீங்கள் அங்குதான் குடியிருக்கிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் யாரிடமிருந்து சொத்தினை கிரயம் வாங்கினீர்கள் என்றால் நான் நிர்மலா தேவி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினேன். கடந்த 02.11.2015 ல் கிரயம் வாங்கினீர்கள் என்றால் சரிதான். அந்த ஆவணம் வழக்கில் மூன்றாவது ஆவணமாக குறியிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் ஆவணப்படி அடி மனை அதாவது வீட்டுமனை மட்டுமே வாங்கினீர்கள் என்றால் சரிதான். சாட்சியானவர் குரூப் ஹவுஸ் இருந்ததாக கூறுகிறார் பதிவு செய்யப்பட்டது. பத்திரத்தில் காலி மனை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்பொழுது சொத்தில் வீடு இருக்கிறதா இல்லையா என்றால் வீடு இருக்கிறது. அந்த வீட்டில் பூபாலன் அவர்களின் தாயார் ரத்தினம்மாள் வசிக்கிறாரா என்றால் வசிக்கிறார். நீங்கள் நிர்மலாதேவியிடம் கிரயம் வாங்கியதாக சொன்னீர்கள் அவர் பூபாலன் என்பவரிடம் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். பூபாலன் என்பவரிடம் கடந்த 10.06.2015 ல் கிரயம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தை வழக்கில் நீங்கள் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். அது இரண்டாவது ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பூபாலன் என்பவர் நிர்மலாவுக்கு கிரயம் கொடுத்த ஆவணத்தில் அடிமனை மட்டுமே என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பூபாலன் இருக்கிறாரா என்றால் தெரியாது. நிர்மலா தேவி உங்களுக்கு என்ன உறவு என்றால் என்னுடைய கணவரின் தங்கை ஆவார். நிர்மலா தேவி ஒட்டிவாக்கம் கிராமத்தில் வசிக்கிறார்கள் என்றால்

சரிதான். வழக்கு சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்து நிர்மலா தேவி குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள மனை வீடு ஆகியவை பிரதிவாதி சண்முகத்திற்கு சொந்தம் என்று சொன்னால் சரிதான். நிர்மலா தேவியின் மாமனார் பெயர் மணி என்று சொன்னால் சரிதான். மணி, பூபாலன், சண்முகம் ஆகிய மூவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் கிராம நத்தம் மனை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர் வழக்குரையில் தாவா சொத்து மற்றும் மணி சொத்து பூபாலன் சொத்து சண்முகம் சொத்து ஏக குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து தெரியுமா என்றால் நான் படித்துப் பார்த்தேன் எனக்கு சரியாக புரியவில்லை. 30 ஆண்டுகளுக்கு முன்பாக மேற்படி 3 சகோதரர்களும் சேர்ந்து கொண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பூபாலன் வாங்கிய சொத்தில் அவர் வீடு கட்டி வாழ்ந்து வந்தாரா என்றால் 30 வருடத்திற்கு முன்பு கட்டியது எனக்கு தெரியாது. பூபாலன் அவருக்கு கிடைத்த சொத்தில் அவரது மனைவி ருக்மணி பெயரில் பட்டா வாங்கினார் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் 17 அடிக்கு 29 அடி காலியாக இருக்கிறது என்று சொன்னால் சரிதான். அந்த காலி இடத்திற்கு தெற்கு பக்கம் தான் குரூப் ஹவுஸ் வீடு உள்ளது என்றால் காலி மனை இருக்கிறதா குரூப் ஹவுஸ் வீடு இருக்கிறதா என்று தெரியாது. வழக்கு சொத்தில் தெற்கு பக்கமாக 17 அடிக்கு 16 அடி சண்முகம் என்பவர் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் தெற்கு பக்கமாக பூபாலன் என்பவர் தன் தாயாருக்கு 17 ¾ அடிக்கு 36 ½ அடி அளவு கொண்ட மனையையும் அதிலிருந்து வீட்டையும் அவருடைய தாயாருக்கு தானமாக கொடுத்தார்கள் என்றால் சரியில்லை. வழக்கு சொத்திற்கு வில்லங்கச் சான்று வாங்கி பார்த்தீர்களா என்றால் வில்லங்கங்கள் எதுவும் இல்லை வாங்கி பார்த்தேன். தாவா சொத்திற்கு தெற்கு பகுதியில் பூபாலன் என்பவர் ரத்தினம்மாளுக்கு தானமாக கொடுத்த பின்பு தான் நிர்மலா தேவி உங்களுக்கு கிரயம் கொடுத்தார் என்றால் சரியில்லை. பூபாலன் என்பவர் நிர்மலா தேவிக்கு

தாவா சொத்தில் வடக்கு பக்கம் 16 அடிக்கு 29 அடி கொண்ட காலி மனை மட்டும் கிரயம் கொடுப்பதாக ஏற்பாடு இருந்தது என்றால் சரி இல்லை. பூபாலனை நீங்கள் எப்பொழுது கடைசியாக பார்த்தீர்கள் என்றால் நான் இதுவரை பார்த்ததே கிடையாது. பூபாலன் என்பவருக்கு குடிப்பழக்கம் இருந்த காரணத்தினால் நிர்மலா தேவி முறையற்ற வகையில் செல்வாக்கை பயன்படுத்தி முழு சொத்தையும் கிரயம் எழுதி வாங்கிக் கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவருக்கு குடிப்பழக்கம் இல்லை. நிர்மலா தேவி கிரையம் வாங்கிய பிறகு கிராமத்தில் ஒரு பஞ்சாயத்து நடைபெற்றது அது பற்றிய உங்களுக்கு தெரியுமா தெரியாதா என்றால் எனக்கு தெரியாது. அந்த பஞ்சாயத்தில் நிர்மலா தேவி காலிமனை மட்டும் என்று எழுதுவதற்கு பதிலாக முழு சொத்தையும் எழுதி வாங்கிக் கொண்டதாகவும் காலி மனை தவிர மற்ற சொத்துக்களை பூபாலன் என்பவரிடம் ஒப்படைத்து விடுவதாகவும் பஞ்சாயத்தில் ஒப்புக்கொண்டார் அது பற்றிய உங்களுக்கு தெரியுமா தெரியாதா என்றால் தெரியாது. நீங்களும் நிர்மலா தேவியும் சதி செய்து கொண்டு பூபாலனுக்கு சம்பந்தமான சொத்தையும் சேர்த்து கடந்த 02.11.2015இல் கிரயம் பெற்று உள்ளீர்கள் என்றால் வாங்கி விட்டேன் சதி எதுவும் செய்யவில்லை. இந்த வழக்கில் நீங்கள் பூபாலனை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நிர்மலா தேவி என்பவரை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ரத்தினம்மாள் என்பவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை. ரத்தினம்மாள் அவரது மகன்களிடமிருந்து சொத்தை தானமாக வாங்கியுள்ளார் அவரை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியில்லை. வழக்கு சொத்தில் நீங்களும் நிர்மலா தேவியும் அனுபவத்தில் இருந்தது கிடையாது என்று சொன்னால் சரி இல்லை. வழக்கு சொத்தில் கட்டிடங்கள் உள்ளது அதை மறைத்து நீங்கள் காலியிடம் என்று கூறி கிரயம் வாங்கி உள்ளீர்கள் ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. அரசாங்கத்தை ஏமாற்றி கட்டிடம் இருப்பதை மறைத்து கிரயம் வாங்கி உள்ளீர்கள் தற்போதும் கிரயம் வாங்கியுள்ளீர்கள் ஆகவே வழக்கு

தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. தற்பொழுது காலி மனை என்று வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் ஆகவே தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.